**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous | : |
| Preliminary Register : | | Case No. | : **S.C.9/2020** |
| Sessions : | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | | Prosecution | : **P.W. 3** |
| | | Defence | : **D.W.** |
| | | Court | : **C.W.** |

| **Name :** | பெரியசாமி | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **24.10.2025**

**5, 10 முதல் 13, 17 எதிரிகள் ஆஜர். 3வது ஆஜரில்லை. மனுதாக்கல் ஏற்பு.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது கிராமநிர்வாக அலுவலராக பணியாற்றி ஓய்வுபெற்றுவிட்டேன். கடந்த 13.12.2014ம் தேதி வாலிகண்டபுரம் கிராம உதவியாளராக பணியில் இருந்தபோது போலிமதுபாட்டில்கள் தயார் செய்ததை ஆர்.எஸ் திருமணமகால் அருகில் அஷேத்பாட்ஷா இடத்தில் கண்டுபிடித்ததாக சொல்லி விசாணைக்கு மதுவிலக்கு பிரிவு ஆய்வாளர் என்னையும், அப்போதைய கிராம நிர்வாக அலுவலர் பழனிசாமியையும் அழைத்தார். அதன்பின்னர் ஆர்.எஸ் திருமண மண்டபத்திற்கு சென்றோம். வெற்றிவேல் என்பவர் அவர்களுடன் சேர்ந்து மதுபாட்டில்கள் தயார் செய்ததாக கூறி அவருடன் சேர்ந்து 10பேர்களை அடையாளம் காட்டினார். எங்கள் முன்னிலையில் விசாரணை செய்தபோது செல்வம் என்பவர் தானாக முன்வந்து வாக்குமூலம் கொடுத்தார். அவரை கைதுசெய்தார்கள். அதன்பின்னர் முதல்வண்டியில் இருந்த 80 வெள்ளைநிற கேன்கள் 35லிட்டருடன் கூடியது மற்றும் காலிகேன்கள் 300 கைப்பற்றினார்கள். அதேபோன்று இரண்டாவது வண்டியில் இருந்து 80லிட்டர்

பிடிக்கக்கூடிய கேன்களில் 35லிட்டர் திரவம் இருந்ததை கைப்பற்றினார்கள். அதில் 300 காலிகேன்கள் இருந்தது. அதன்பின்னர் மூன்றாவது வண்டியில் 57 திரவமுள்ள கேன்கள் மற்றும் 200 காலிகேன்களை கைப்பற்றினார்கள். நான்காவது வண்டியில் இருந்த 50 அட்டைபெட்டியில் பாட்டில்களுடன் கைப்பற்றினார்கள். அதன்பின்னர் மற்றொரு வண்டியில் 10 அட்டையில் Green Magic பிராந்தி என்ற இருந்ததை கைப்பற்றினார்கள். அதன்பின்னர் டாடா சுமோ வாகனத்திலிருந்து 5 அட்டைபெட்டிகளில் பிராந்தியுடன் இருந்ததை கைப்பற்றினார்கள். அதன்பின்னர் பொலிரோ வாகனத்தில் அட்டைபெட்டியில் Green Magic பிராந்தி என்று இருந்ததை கைப்பற்றினார்கள். சிடி மோட்டார் சைக்கிளை கைப்பற்றினார்கள். மொத்தம் இரண்டு மோட்டார்சைக்கிளை கைப்பற்றினார்கள். ஒரு டேங்கர் லாரியை கைப்பற்றினார்கள். அதன்பின்னர் லேபிள், மிசின் ஆகியவற்றை கைப்பற்றினார்கள். கைப்பற்றிய பொருட்களின் எண்ணிக்கை எனக்கு ஞாபகமில்லை. இதுசம்மந்தமாக மகசர் தயாரித்தார்கள். மொத்தம் 11மகசர்கள் தயார் செய்தார்கள். நான் கையெழுத்து செய்தேன். வேறு ஆவணங்கள் எதுவும் கைப்பற்றவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து வாங்கினார்கள். எதிரி செல்வம் கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தில் இரண்டாவது கையெழுத்து என்னுடையது ஆகும். அந்த கையெழுத்து அ.சா.ஆ.2, என்னிடம் காட்டப்படும் மகசர்களில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அந்த மகசர்கள் முறையே அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.14 ஆகும். ஆய்வளார் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் பலவழக்குகளில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன். காவல்நிலையத்தில் வைத்து நான் கையெழுத்து செய்தேனா என்றால் கல்யாண மண்டபத்தில் வாங்கினார்கள். என் முன்னிலையில் எந்த எதிரியிம் ஒப்புதல்வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், எந்த வழக்கு சொத்துக்கள் கைப்பற்றபடவில்லை என்றும், நான் காவல்நிலைய கையிருப்பு சாட்சி என்பதால் போலிசார் பதிவு செய்த வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாகனங்களின் பதிவெண்களை என்னால் கூறமுடியவில்லை என்றால் ஞாபகமில்லை. அது ஈச்சர் வாகனங்கள் ஆகும். ஈச்சர் கம்பெனி வாகனங்கள் பொதுவெளியில் நிறைய ஓடுகிறது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை